# சினிமா ஏற்படுத்தும் சீர் கேடுகள்.

[ தமிழ் – Tamil – تاميلي ]

**Author**

M.S.M. இம்தியாஸ் யூசுப்

2013 - 1434

IslamHouse.com

# الآثار السلبية من الأفلام السينيمائية

« باللغة التاميلية »

محمد إمتياز يوسف

2013 - 1434

IslamHouse.com

# சினிமா ஏற்படுத்தும் சீர் கேடுகள்.

M.S.M . இம்தியாஸ் யூசுப் ஸலஃபி.

மனிதன் நாகரீக பண்பாடுகளுடன், ஒழுக்க விழுமி யங்களுடன் வாழ்வதற்கு ஆரோக்கியமான ஒரு சூழல் அவசியம். ஆரோக்கிய வாழ்வுக்கு கேடு விளைவிக்கக் கூடிய சுற்றுச் சூழலை சுத்தப்படுத்து வதுபோல கலாசார பண்பாடுகளை நாசமாக்கக் கூடிய காரியங்களையும் சுத்தப்படுத்தி அப்புறப் படுத்த வேண்டும்.

இன்று நாட்டில் இனவாத கோஷங்களுக்கும், அரசி யல் விவகாரங்களுக்கும் அடுத்ததாக ஆபாச சினி மாக்களை பற்றித்தான் எல்லோரும் விமர்சனம் செய்கிறார்கள். பலத்த கண்டனங்களை தெரிவிக் கிறார்கள்.

வளர்ந்து வரும் இளம் சமூகம் தவறான நடத்தை களுக்கு இட்டுச் செல்வதற்கு வழிகாட்டியாக இந்த

ஆபாசப்படங்கள் அமைந்துள்ளன. இத்திரைப் படங்கள் மூலமாக கல்வியை கற்றுக்கொள்ளவோ, கலா சாரத்தை பெற்றுக் கொடுக்கவோ முடியாது. ஆனால், பணம் சம்பாதிக்கும் வழியை பெருக்கிக் கொள்ள முடியும். கீழ்தரமான எண்ணங்களையும் சிந்தனைகளையும் ஊக்குவிக்க முடியும் . சினிமாவின் மூலம் எந்தவொரு மேதையும் சீர்திருத்த வாதியும் உருவாகி விடுவதில்லை.

பாதையில் பெற்றோர்களும், பிள்ளைகளும், அண்ணனும், தங்கையும் செல்ல முடியாத நிலையில் ஆபாசக் காட்சிகள் சுவரொட்டிகள், கட்அவுட்கள் வைக்கப்பட்டுள்ளன. இளம் பெண்ணொருத்தி பஸ்ஸில் அல்லது பாதையில் செல்லும்போது பக்கத்திலுள்ள ஆண்களின் பார்வைகளினால் வெட்கித் தலை குனியக் கூடிய கொடூரமான ஒரு நிலையை இந்த திரைப்படங்கள் தோற்றுத்துள்ளன.

இத்திரைப்படத்தை பார்த்துவிட்டு வெளியில் வருபவனுக்கு பக்கத்தில் இருக்கக் கூடிய தன் மனைவிக்கும் அடுத்தவன் மனைவிக்கும் வித்தியாசம்

தெரியாது. அவனது பார்வையும், சிந்தனையும் கொடூரமான கற்பனைக்கு சென்றுவிடும்.

வெட்கம், மானம், மரியாதை, மனிதனிடமிருந்து அகன்று போகும்போது கீழ்த்தரமான நடவடிக்கைகள்தான் பிரதிபலிக்கும். தனி நபர் பாதிப்பினால் குடும்ப, சமூகவாழ்வு பாதிக்கப்பட்டு சின்னாபின்னமாகி விடும்.

நாட்டில் நடைபெறக்கூடிய கொலை, கொள்ளை துஷ்பிரயோகம் கற்பழிப்பு மற்றும் வன்முறைகளுக்கு இத்திரைப்படங்கள் வழிகாட்டிகளாக உள்ளன என்பதை நாட்டு நடப்புகள் மூலம் அறிகிறோம். இதில் ஆச்சரியமான செய்தி என்னவெனில் மதத்தின் பெயரால் ஆபாசப் படங்கள் வெளிவந்தும் கூட மௌனமாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான்.

“வயது வந்தவர்களுக்கு மட்டும்தான்” என்ற முத்திரையுடன் வெளிவரும் படங்கள் வயதெல்லையும் தாண்டி போய்க் கொண்டிருக்கிறது. ஆபாசப்படங்கள் போலவே ஆபாச சஞ்சிகைகள், புத்தகங்கள்

CDகள் சந்தைகளில் வீடியோ கிளப்களில் பகிரங் கமாக விற்பனை செய்யப்படுகின்றன. இணையத் தளங்கள் இயங்குகின்றன. இவைகளுக்கெதிரான கண்டனங்கள் எழுந்தாலும் அரசாங்கம் ஆக்க பூர்வமான சட்ட நடவடிக்கைகள் எடுத்தாக தெரியவில்லை. அரசுக்கெதிராக செய்திகள் வெளி வருமாயின் அப்போது மீடியாக்களுக்கெதிராக நடவடிக்கைகள் எடுத்து முடக்கிவிடுகின்றது.

எல்லோரும் ஆபாச படங்களை தடை செய்வதில் தான் கருத்து தெரிவிக்கிறார்கள். ஆபாசப் படங்கள் ஆபாசம் இல்லாத படங்கள் என இரு வகையாக பிரித்து தான் கருத்துக்களை தெரிவிக்கிறார்கள். எனவே இவர்களது பார்வையில் ஆங்கிலத்திலும் மளையாளத்திலும் சிங்களத்திலும் வெளிவரும் ஆபாசப் படங்கள் (A டைடில் படங்கள்) தான் சமூ கத்தை சீரழிக்கிறது. ஆபாசம் இல்லாத (A டைடில் என்று முத்திரை குத்தாத தமிழ், சிங்கள, ஹிந்தி) படங்கள் அத்தகைய சீரழிவை தரவில்லை என்பது வாதமாகும்.

சினிமாவை பொறுத்தவரை பெண்களை ஆபாசப் பண்டங்களாக காட்சிப் பொருட்களாக சித்தரிக் கிறார்கள். அரைகுறை ஆடையுடன் வளம் வருவதும், நடன மாடுவதும் பெண்ணின் பிரதான பாத்திரமாகும். எந்தளவு குறைந்த ஆடையுடன் மேனியினை காண்பிக்க முன்வருகிறாளோ அவளுக்குத் தான் கதாநாயகி பாத்திரம் வழங்கப்படும் எப்பெண் உதடுடன் உதட்டை அழுத்தி முத்தமிட்டு தாராள தன்மையுடன் நடிக்க வருகிறாளோ அவளுக்கு கால்ஷீட் அதிகம்.

இடையழகும் தொடையழகும் தொப்புள் அழகும் அதிகம் காண்பிக்கும் பெண்ணுக்குத்தான் மவுசு அதிகம்.

ஒட்டுமேனியுடன் தொட்டுக் கொள்ளும் ஆடையு டன் ஆடிப்பாடி நடனமாடுகிறாளோ அவளுக்குத் தான் கனவுக் கண்ணி என்ற பட்டம்.

இரட்டை வசனங்களின் பாடல்கள் மற்றும் நகைச் சுவைகள் சேர்ந்த பாத்திரத்துடன் குடும்ப, சமூக

கதைகளையும் கொஞ்சம் கூறி சேர்த்து "இது ஒரு குடும்பப் படம்" என்று சான்றிதழ் கொடுக்கிறார்கள்.

சில சமயம் பெற்றோர்கள் தொலைக் காட்சியில் சினிமா காட்சிகளை பிள்ளைகளுடன் உட்கார்ந்து பார்க்க முடியாமல் முகம் சுளிக்கிறார்கள். "அப்படி யான காட்சிகள்" வரும்போது உடனே எழுந்து சென்று விடுகிறார்கள். அல்லது நிறுத்தி விடு கிறார்கள். இல்லையேல் தனிமையில் பார்க்க விரும்புகிறார்கள். இந்த அவஸ்தைகள் " குடும்பப் படங்கள்" என்று சொல்லக்கூடிய படங்களில்தான் வருகின்றன. குடும்பப் படத்தை பொறுத்தவரை ஆணும் பெண்ணும் முழு ஆபாசத்தில் இல்லாமல் அரைகுறை ஆடையுடன் வருகிறார்கள். மற்ற ( A டைடில்) படத்தை பொறுத்தவரை முழுமையான ஆபாசத்தில் வருகிறார்கள். ஆபாசத்தைப் பொறுத்த வரை இரண்டும் ஒரே வகையைச் சார்ந்தது என்பதை அறிவுடையோர் ஏற்றுக் கொள்வார்கள்.

சினிமாவின் மூலம் மனிதனுக்கு நற்பண்புகளை யோ, நாகரீகத்தையோ கற்றுக் கொடுக்க முடியாது.

வன்முறைகளையும், கற்பழிப்புக்களையும், காதல் ஊடல்களையுமே அதிகமாக கற்றுக் கொடுக்கப் படுகிறது. பிள்ளைகளுக்கு கட்டாயப் பாடங்களாக படிப்பிக்கப்படுகின்றன. சினிமா ஒரு பொழுது போக்குச் சாதனம் என்ற பெயரில் அசிங்கங்களை வித விதமாக காட்சிப்படுத்தப்படுகின்றன. தங்களது உடல் பரிமாணங்களை காண்பித்து பணம் சம்பாதி க்கும் இயந்திரம் தான் சினிமா! கோடிக் கணக்கில் பணம் சம்பாதிக்கும் இலகு சாதனம் சினிமா! கதானாயகன் உடலை மறைத்துக் கொள்வான் கதா நாயகி உடலை திறந்துக் கொள்வாள் என்பது தான் இத்தொழிற்சாலையில் முக்கிய விதி.

மக்களை மடையர்களாக்கி பணம் சம்பாதிக்க அவர்கள் கையாண்ட வழிமுறைதான் சினிமா! கலை அம்சம் பொருந்திய ஊடகம் என்ற நவரச வார்த்தை.

சினிமாவில் நடிக்கும் ஒவ்வொரு ஆணும், பல பெண்களை அனுபவிப்பதும், ஒவ்வொரு பெண்ணும் பல ஆண்களை அனுபவிப்பதும்தான் யதார்த்தம்.

இந்த யதார்த்தத்தை நடிகர் பாண்டியராஜன் இப்படி விளக்கப்படுத்துகிறார் “கட்டுகட்டா பணம் கொடுத்து மூணு வேளை கறியும் சோறும் போட்டு காரும் பங்களாவும் கொடுத்து அழகான பெண்களை கட்டிப்பிடிக்கச் சொல்கிறது சினிமா. இதற்காக 100 வருஷமானாலும் போராடலாம் என்கிறார் (இதுதான் சினிமா பக்12.)

இதற்குப் பெயர் தான் கலை, கலாசாரத்தை வெளிப் படுத்தும் அரங்கம்.

சினிமாவை ஆதரிப்பவர்கள் வாழ்க்கையில் நடப்ப தைத் தானே சினிமாவில் காட்டுவதாக கூறுகிறார் கள். இவர்கள் உண்மையானவர்களாக இருந்தால் தங்களது அந்தரங்கமான வாழ்க்கையை நாலு பேர் பார்க்க பகிரங்கமாக காட்சிப்படுத்த முன்வர வேண்டும். ஏனெனில் இந்த வாழ்க்கையைத் தானே சினிமாவிலும் காட்டுகிறார்கள். அதைத் தானே இவர்களும் இயக்கிப் பார்த்து நியாயம் கூறு கிறார்கள்? இரண்டு பேர் நடித்துக் காட்டுவதை பார்க் கக் கூடிய இவர்கள், இவர்களது அந்தரங்கக் காட்சி

களை நாலுபேர் பார்க்க அனுமதிக்க மறுக்கிறார்கள். இவர்களது உள்மனம் சினிமாவின் கேடுகெட்ட தனத்தை ஏற்றுக் கொண்டாலும் சமூகத்தை ஏமாற்ற அந்த உண்மையை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். தங்கள் பிள்ளைகள் ஜாதி வேறுபாடின்றி காதலித்து கரம் பிடிப்பதையோ பெற்றோரை எதிர்த்து ஓடுவதையோ ஆதரிக்க வேண்டும். இதுவும் சினிமாவின் நிஜம் தானே! ஆதரிப்பார்களா இவர்கள்?

சினிமாவில் நடிக்கும் கதாநாயகர்கள் தங்களது மனைவிகளையும் இளம் பெண் பிள்ளைகளையும் சினிமாவில் நடிக்க விடாமல் தடுப்பதன் நோக்கத்தை புரிந்து கொண்டால் சினிமாவின் உண்மை நிலை என்ன என்று புரிந்துவிடும்.

தன்னுடைய மனைவியை இன்னுமொருவன் கட்டிப் பிடிக்கக் கூடாது முத்தமிடக்கூடாது என்று ரோஷம் கொள்பவர்கள் அடுத்தவனுடைய பெண்களை கட்டிபிடிப்பதும் முத்தமிடுவதும் சுயநல மின்றி வேறென்ன?

பொதுவாக சினிமாவில் நடிப்பவர்களை குறிப்பாக கதாநாயகிகளை மணமுடிப்பதை பெற்றோர் விரும்பு வதில்லை. இதற்கு காரணம் ஏன் என்பது எல்லோருக்கும் தெரியும். இதனை புரிந்து கொள்ள பெரிய ஆய்வோ ஆராய்ச்சியோ தேவையில்லை. சற்றென்று புரிந்து கொள்ள முடியும். சினிமாவில் காட்டுவதை, நடிப்பதை ஏற்றுக் கொள்ள இவர்களது உள்ளங்கள் மறுக்கின்றன. ஆனால் கலை அம்சம் பொருந்திய தெய்வீக் கலாச்சாரமாக பேசுவார்கள்.

இந்த இடத்தில் இவர்கள் வெட்கம் மானம் பற்றி நன்கு புரிந்து கொள்கிறார்கள். அடுத்தவனுடைய பெண் பிள்ளைகளை அனுபவிப்பார்களாம். தம் மனைவியை எவரும் அணுகக் கூடாதாம். தனக்கு வரும் மருகமள் பத்தினியாக கௌரவமாக இறுக்க மாக மூடிக்கொள்ளக் கூடியவளாக இருக்க வேண்டு மாம்.

மொத்த சமுதாயமும் சினிமாவில் சீரழிந்து போனா லும் அந்த சீரழிவு தங்களது மனைவி மக்களுக்கு வரக்கூடாது என்பதே அவர்களது நோக்கம். வாழ்க்

கையில் நடப்பதை சினிமாவில் காட்டுகிறார்கள் என்பவர்களின் இரட்டை வேடம் தான் இது.

இதை எல்லாவற்றையும் விட கட்டிலில் கிடந்து இரண்டு பேரும் செய்யும் சில்மிஷங்களைப் பார்த்த பிள்ளை " அம்மா அந்த அங்கள் அந்த ஆண்டியை என்ன செய்கிறார்" என்று கேட்கும் போது தான் சினிமாவின் சிம்பல் பளிச்சென்று தெரிகிறது பெற்றோருக்கு!

இந்த பின்னணியில் ஸ்டார்களும் சூப்பர் ஸ்டார் களும் நட்சத்திரங்களும் மெகா நடிகர்களும் நடிகை களும் வளம் வருகிறார்கள். இவர்களுக்கு வருடத் திற்கு ஒருமுறை சிறந்த நடிப்புக்காக விருதும் - தேசிய விருதும்- வழங்கப்படுகிறது. பல பேருக்கு பல மதத்தவர்களுக்கு இது நாகரீக பண்பாடுகளாகத் தோன்றினாலும் ஒழுக்க விழுமியங்களை பாது காக்க விரும்பும் இஸ்லாத்திற்கு நாகரீகமாக தென் படவில்லை.

மனித ஒழுக்க விழுமியங்களில் கவனம் செலுத்தும் மார்க்கம் என்ற வகையில் இஸ்லாத்தின் பார்வை

யில் இவ்விரு படங்களும் சமூகத்தை சீரழிவுக்கு கொண்டு செல்லும் சாதனமாக கணிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண் பெண்ணையும் வெட்கத்தோடும் நாணத்தோடும் கற்போடும் வாழவைக்கும் நில வரத்தைப் பற்றியே இஸ்லாம் பார்க்கிறது. சிறு கீறல் கூட கற்புக்கு வந்து விடக் கூடாது என்று கண்டிப்புடன் அவதானம் செலுத்துகிறது. எனவே மேற்சொன்ன சினிமாவின் இலக்கணத்தை இஸ்லாம் முற்றிலுமாக நிராகரிக்கிறது.. பொழுது போக்கு என்ற பெயரில் அசிங்கங்கள் அரங்கேற்று வதையும் மக்களின் செல்வங்கள் சுரண்டப்படு வதையும் ஏமாற்றப்படுவதையும் எதிர்க்கின்றது. கொஞ்சம் தெளிவாக கூறுவதானால், ஒரு அன்னிய பெண்ணை ஒரு அன்னிய ஆண் உற்று நோக்கு வதையோ, ரசிப்பதையோ ருசிப்பதையோ ( இரு பாலாருக்கும்) இஸ்லாம் தடைசெய்கிறது. ஒரு பெண் தனது அழகையும் அலங்காரத்தையும் தனது கணவனுக்குக் காட்டுவதை அனுமதிக்கிறதே தவிர பிற ஆண்கள் பார்த்து ரசிக்கும் வண்ணம் செயல் படுவதை கண்டிக்கிறது.

அதன் காரணமாகத்தான் பெண்கள் வெளியில் செல்லும்போது கூட அடுத்தவனுடைய கீழ்தரமான பார்வைக்கு ஆளாகாத வண்ணம் அல்லது அடுத்த வனை சுண்டி இழுக்கும் வண்ணம் அரைகுறை ஆடையுடன் அங்கங்கள் தெரியும் விதத்தில் ஆடை அணிவதை தடுக்கிறது. பெண்கள் அடுத்தவனின் ''கற்பனை பார்வைக்கு'' இலக்காகுவதை தவிர்க் கவே இந்த உத்தரவை பிறப்பிக்கிறது. இந்த இலக்கணம் சினிமாவிலும் இருப்பதானாலேயே அதனை இஸ்லாம் தடைசெய்கிறது.

எனவே முஸ்லிம்கள் கண்டிப்பாக இந்த சீரழிவை விட்டும் தூரமாக வேண்டும் ஆரோக்கியமான இஸ்லாமிய சமுதாயத்தை உருவாக்க சினிமா, தொலைக்காட்சிப்படங்கள் தடைக்கற்களாக உள்ளன என்பதை புரிந்துகொண்டு மஃரிப் வேளையில் குர்ஆன் ஓதி, பிள்ளைகளையும் படிக்க வைத்து சிறந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டும். பெற்றோர்களின் கையில்தான் வெற்றியும் தோல்வியும் உள்ளது. அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ إِنَّمَا حَرَّمَ رَبِّيَ الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ وَالْإِثْمَ وَالْبَغْيَ بِغَيْرِ الْحَقِّ وَأَنْ تُشْرِكُوا بِاللَّهِ مَا لَمْ يُنَزِّلْ بِهِ سُلْطَانًا وَأَنْ تَقُولُوا عَلَى اللَّهِ مَا لَا تَعْلَمُونَ

நிச்சயமாக என் இரட்சகன் மானக்கேடானவற்றில் பகிரங்கமானவற்றையும் மறைவானவற்றையும் பாவத்தையும் உரிமையின்றி வரம்புமீறுவதையும் எவ்வித ஆதாரத்தையும் அல்லாஹ் இறக்காமல் இருக்கும் போது அவனுக்கு இணை வைப்பதையும் அல்லாஹ்வின் மீது நீங்கள் அறியாதவற்றைக் கூறுவதையுமே தடைசெய்துள்ளான் என நபியே நீர் கூறுவீராக.(7:33)